கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 360/2018 வா.சா.1 செந்தில்குமார்

அ.வ.எண்.33/2019 (Joint Trial)

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 30.06.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்து தவிர்த்து வேறு நிலங்கள் எனக்கு உள்ளது என்றால் சரிதான். நான் அ.வ.எண்.360/2018 வழக்கில் வாதி என்றால் சரிதான். நான் அ.வ.எண்.33/2019 வழக்கில் பிரதிவாதி என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தொடர்பாகதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் A and B செட்யூல் என இரு செட்யூல்களாக சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் ஏ செட்யூலில் 4 அயிட்டங்களாக சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 அயிட்டங்களுக்கும் எனக்கு 4 எல்லை தெரியுமா என்றால் தெரியும். 4 அயிட்ட சொத்துக்களுக்கும் எனக்கு விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். 4 அயிட்ட சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 ஏக்கர் 67 செண்ட் ஆகும். மேற்படி விஸ்தீரணம் பி செட்யூல் சொத்தை உள்ளடக்கியதா என்றால் இல்லை.

3) நான் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன் என்றால்

மீனாட்சி வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றேன். மீனாட்சி வகையறாவுக்கு வழக்கு சொத்து ஆர்.ராமசாமி முதலியாரிடம் இருந்து கிடைக்கபெற்றது என்றால் சரிதான். கடந்த 1999 ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரம் எத்தனை பரப்பளவிற்கு எழுதப்பட்டது என்றால் மீனாட்சி மற்றும் பாக்கியம் ஆகியோருக்கு ஆதரவாக ஒரு ஏக்கர் பரப்பளவிற்கு மேற்படி ஆர்.ராமசாமி முதலியாரால் எழுதப்பட்டது. மேற்படி ஒரு ஏக்கர் வழக்கு சொத்து சேருமா என்றால் மேற்படி 5 ஏக்கர் 67 செண்ட்டில் சேரும்.

4) வழக்கு ஆ அட்டவணை சொத்து என தனித்து என் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு அ அட்டவணை சொத்து மைய பகுதியில் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதாக கட்சி செய்துள்ள நிலையில் அப்பகுதியை என் வழக்குரை வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் புதிய தடம் அமைக்க முற்பட்டதாக நான் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு அடுத்த கீழ்புறத்தில் சர்வே எண்.75/5 சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.75/5-ல்தான் கிணறு உள்ளது என்றால் சரிதான். வழக்கு ஆ அட்டவணை சொத்தின் அடுத்த கீழ்புறத்தில் கிணறு பகுதி இல்லை என்றால் சரிதான்.

5) மேற்படி அ அட்டவணை சொத்தின் மைய பகுதியில் பிரதிவாதிகள் பிரச்சினை செய்தார்களா என்றால் செய்தார்கள். மேற்படி பிரச்சினை எப்போது செய்தார்கள் என்றால் கடந்த 20.10.2018 அன்று செய்தார்கள். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் தகவல் மட்டும் சொன்னேன் எழுத்து மூலம் புகார் கொடுக்கவில்லை. மேற்படி சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்றால் தர்மராஜ், கண்ணன் மற்றும் ஜெகநாதன் ஆகியோர்களுக்கு தெரியும். மேற்படி நபர்கள் என் உறவினரா அல்லது ஊர்காரர்களா என்றால் அவர்கள் என்

உறவினர்கள் இல்லை. அவர்கள் என் ஊர்காரர்கள். கடந்த 20.10.2018 சம்பவம் நடந்ததாக என் வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் புகார் கொடுக்காததால் குறிப்பிடவில்லை. மேற்படி நபர்கள் சம்பவத்தின் போது இருந்ததாக என் வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் பெயர்கள் குறிப்பிடவில்லை பொதுவாக கூறியுள்ளேன். நான் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சம்பவம் நடந்ததாகவும் அதை சிலர் பார்த்ததாகவும், என் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு ஆ அட்டவணை சொத்து 4 எல்லையும் வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தின் 4 எல்லையும் ஒன்றுதான் என்றால் சரிதான். வழக்கு ஆ அட்டவணை சொத்துக்கள் 4 எல்லைகள் சரியனதா என்றால் சரிதான் (**மேற்படி 4 எல்லைகள் சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டது**) என் வழக்குரையிலோ வா.சா.ஆ.9 ஆவணத்திலோ சர்வே எண்.75/3 தென்கோடியில் என்று எங்கேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. வழக்கு ஆ அட்டவணை சொத்தில் *"இதன் மத்தியில்"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது 4 எல்லைகள் குறிப்பிட்டபிறகு 4 எல்லைகளுக்கு மத்தியில் என்று பொருள்பட எழுதப்பட்டுள்ளது.

7) வழக்கு ஆ அட்டவணை சொத்து விபரம் என்னால் இவ்வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.75/3 -ற்கு அடுத்த தென்கோடியில் ஆ அட்டவணை சொத்து உள்ளது என்பது தவறு என்றும், அது மேற்படி சர்வே எண் சொத்தின் மத்தியில்தான் உள்ளது என்றும், சொன்னால்

சரியல்ல.

8) நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றபோது எதிர்வழக்கு தடத்தின் இருபுறமும் தென்னை மரங்கள் இருந்தது என்றால் சரியல்ல. எதிர்வழக்கு தடத்தின் வடபுறத்தில் இரண்டு கூரை குடியிருப்புகள் இருந்தன என்றால் சரியல்ல. எதிர்வழக்கு தடமானது கிணற்று பாசனத்திற்காகாவும், குழாய் அமைக்கவும், கால்நடைகள் அழைத்து செல்லவும் அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றபிறகு என் வசதிக்காக எதிர்வழக்கு தடத்தை அழித்து விட்டு வழக்கு ஆ அட்டவணை சொத்தை தடம் என தவறாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆ அட்டவணை சொத்துக்கு அடுத்த தென்புறம் என்னுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அடுத்த தென்புறத்தில் உள்ள சொத்தின் அளவீடுகள் என்ன என்றால் சுமார் 1.5 மீட்டர் அகலமும் 112 அடி நீளமும் கொண்டதாகும். அப்பகுதி என்ன பயன்படுகிறது என்றால் அதில் மலைவேம்பு விவசாயம் செய்து வருகிறேன். எதிர்வழக்கு தடத்தை மறைப்பதற்காக அதேபோல் 4 எல்லை காட்டவேண்டும் என்பதற்காக மேற்படி பகுதியை நான் விடுத்து வழக்கு ஆ அட்டவணை சொத்தை பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9) எதிர்வழக்கு தடத்தில் நான் பிரச்சினை செய்ததாக பிரதிவாதிகள் என் மீது போலிஸ் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான் ஆனால் அது பொய் புகாராகும். அப் புகாரின்பேரில் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றும் பிரச்சினை உரிமையியல் தன்மை கொண்டதால் நீதிமன்றத்தை அனுகி தீர்த்துக்கொள்ளுமாறு முடித்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். வழக்கு

ஆ அட்டவணை சொத்தை பிரதிவாதிகள் அனுபவிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கு ஆ அட்டவணை சொத்தானது மைய பகுதியில் அல்லாமல் தென்கோடியில் இருப்பதாக நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். வழக்கு புல எண்.75/3 க்கு கிழக்கிலும், மேற்கிலும் பிரதிவாதிகள் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். என் பொய்யான தகவல்கள் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளதால் அது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

10) வா.சா.ஆ.1 பாகப்பத்திரம், வா.சா.ஆ.2 கிரைய பத்திரம், அதனை அனுசரித்து பெறப்பட்ட வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் மற்றும் கடந்த 31.10.2018 அன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை ஆகியவை அனைத்தும் வழக்கு சொத்தை நான் வீம்புக்கு என்று கிரையம் பெற்று பிரதிவாதிகளை தொல்லை செய்யவேண்டும் என ஏற்படுத்திய ஆவணங்கள் என்றால் சரியல்ல. என் வழக்குரை சொத்து விபரப்படி என் வழக்குரை வரைபடம் இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கு குறைப்பாடு உடைய வழக்கு என்பதால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எதிர்வழக்கு சொத்து விபரப்படி வழக்கு வண்டித்தடத்தை கடந்த 1970-ல் இருந்து 2018 வரை பிரதிவாதிகள் அனுபவம் செய்துவந்தார்கள் என்றும், நான் கிரையம் பெற்றபிறகு அவர்களது அனுபவத்தில் இடையூறு செய்து பிரச்சினை செய்தேன் என்றும், அவ்வாறு பிரச்சினை செய்ய எனக்கு எவ்வித உரிமை இல்லை என்றும், சொன்னால் சரியல்ல. எதிர்வழக்கு சொத்து விபரப்படி எதிர்வழக்கு தடத்தில் எக்காலத்திலும் பிரச்சினை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்கான அ.வ.எண்.33/2019 -ல் உள்ள பரிகாரங்கள் பிரதிவாதிகளுக்கு

கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. அ.வ.எண்.360/2018 பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.